வாகை பதிப்பகம்

International Research Journal of Tamil Literary Studies

# WOMEN IN THO.PARAMASIVAN'S PANPATTU ASAIVUGAL

# தொ.பரமசிவனின் 'பண்பாட்டு அசைவுகளில்' பெண்கள்

**R. Sujatha [a,*], S. Veeralakshmi [a]**

**[a] Department of Translation, Tamil University, Thanjavur-613 010, Tamil Nadu, India.**

**[*] Corresponding Author: sujathsenthil13@gmail.com**

**Received: 31-01-2023, Accepted: 04-03-2023, Published: 30-04-2023**

DOI: https://doi.org/10.34256/vp2321

**Abstract:** *Tho.Paramasivan often known as Tho.Pa, has written more than 15 books which focus on the historical, archaeological and anthropological aspects of Tamil society. Tho.Paramasivan's Panpattu Asaivugal is a collection of essays capturing the cultural symbols and practices of different communities. He has a firm opinion that women remained the mainstay of religion and spiritualism in Tamil Nadu. This article is aimed to analyse information related to women in rituals, Occupations, Relationships, Games, Female deities in his book Panpattu Asaivugal.*

**Keywords:** *Puberty, Fasting, Marriage, Female Deity, Turmeric and Kungumam, Occupation, Mortar and Pestle.*

***ஆய்வுச்சாரம்:*** *"தொ.ப" என்று அனைவராலும் அழைக்கப்படும் பேராசிரியர் முனைவர் தொ.பரமசிவன் தமிழ் சமூகத்தின் வரலாறு, தொல்லியல், மானுடவியல் அம்சங்களை மையமாக வைத்து பதினைந்திற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். தொ.பரமசினின் 'பண்பாடு அசைவுகள்' பல்வேறு சமூகங்களின் கலாசாரம் மற்றும் பழக்கவழக்கங்களை வெளிச்சமிட்டு காட்டுகிறது. நாம் அறிந்த தமிழகத்தின் அறியாத பல்வேறு செய்தியை இந்நூல் எடுத்துரைக்கிறது. தமிழகத்தின் மதம் மற்றும் ஆன்மீகம் நிலைத்து நிற்க முக்கிய ஆதாரம் பெண்கள் என்று உறுதியான கருத்தினை வலியுறுத்துகிறது. பண்பாட்டு அசைவுகள் என்னும் நூலில் பெண்கள் சார்ந்த சடங்குகள், தொழில்கள், உறவுமுறைகள், விளையாட்டுகள், பெண் தெய்வம் சார்ந்த தகவல்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***கருச்சொற்கள்:*** *பூப்பெய்தல், விரதம், திருமணம், பெண் தெய்வம், மஞ்சள் மற்றும் குங்குமம், தொழில்கள், உரலும் உலக்கையும்.*

## முன்னுரை

தமிழ், மொழிவளமும் இலக்கியவளமும் சிந்தனைவளமும் உடையது. நுண்மான் நுலைபுழம் கொண்டு ஆராய்ந்தால் .;இவற்றை உணரலாம். இலக்கியம் 'தொட்டணைத்தூறும்' மணற்கேணி கற்க, கற்க கைமண்ணளவாகவே காணப்படுகிறது. இவ்விலக்கியம் திறனாய்வுக்கு அடித்தளம். எனவே இலக்கியத்தின் செழுமையை உணர திறனாய்வு தேவைப்படுகிறது. இலக்கியம் காலத்தின் கண்ணாடி, பண்பாட்டின் அடையாளம். இவ்வகையில் இலக்கியத்தை இலக்கிய வல்லுநர்கள் பலர் திறனாய்வு செய்கின்றனர். ''எப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' எனத் தங்களின் வாழ்க்கையை இலக்கியத்தின் வழி இனம் காணுகின்றனர். தொ.பரமசிவன் என்ற ஆய்வாளரும் தன்னுடைய ஆய்வுக் கட்டுரைகளைத் திறனாய்வின்வழி வெளிக்கொணர்கிறார். அவருடைய 'பண்பாட்டு அசைவுகள்' என்னும் நூலில் காணப்படும் பெண்கள் குறித்த திறனாய்வினை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

இவருடைய இவ்வாய்வினைக் கீழ்க்கண்ட பொருண்மையில் வகைப்படுத்தலாம்.

1. உரலும் உலக்கையும்
2. நோன்பு
3. திருமணத்தில் பெண்கள்
4. தொழில் முறையில் பெண்கள்
5. மகப்பேறுகாலச் சடங்கு
6. மஞ்சள் குங்குமம்
7. தெய்வ வழிபாட்டில் பெண்கள்

## உரலும் உலக்கையும்

மனித வாழ்க்கையில் சடங்குகள் முக்கிய இடம் வகிக்கின்றன. மனிதர்களின் வாழ்வில் சடங்குகள் பண்பாட்டோடு பின்ணிப்பிணைந்து இருக்கின்றன. பண்டைய கால மனிதன் இயற்கையோடியைந்த வாழ்க்கையை வாழ்ந்து வருகிறான். இயற்கை மாறுதலுக்கு ஏற்ப மனித மனமும் மாறுபடுகின்றது என்பார் சு.சக்திவேல். தொல்காப்பியத்தில் 'நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்' என்பது நம்பிக்கைக் குறித்த செய்தியாகப் புலப்படுகிறது. இவ்வகை நம்பிக்கைகளும் சடங்குகளும் மகளிரது வாழ்வில் மிகுதியாகக் காணப்படுகிறது. இச்சடங்குகள் குடும்பம் அதன் தூய்மை இவைகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால் பெண்கள் தனியாகக் கடைபிடிக்கும் சடங்குகளில் மட்டுமின்றி குடும்பத்தில் பொதுவாக நடைபெறும் சடங்குகளிலும் அவர்களது பங்கு இன்றியமையாதது என்று ச.முத்துச்சிதம்பரம் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. இதன் அடிப்படையில் தொ.பரமசிவன் குறிப்பிடும் சில சடங்குமுறைகளும் இவ்வகையில் அடங்கும். பெண்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் மீது நம்பிக்கைக் கொண்டிருந்தனர். உலக்கை, உரல் குறித்த தகவல்களை கல்வெட்டுக்களிலிருந்தும் இலக்கியங்களிலும் தொ.ப வரிவாக எடுத்துரைக்கிறார். உரல், உலக்கை குறித்து,

பூப்பெய்திய பெண்ணை வீட்டின் ஒரு மூலையில் உட்காரவைத்து (இரும்பு) பூண் கட்டிய உலக்கையினை அவளுக்குக் குறுக்காகக் கிடைவசத்தில் வைப்பார்கள். இது தீய ஆவிகளிடம் இருந்து அப்பெண்ணைக் காப்பதாக நம்புகிறார்கள். வாழ்வரசிப் (சுமங்கலி) பெண்கள் உரலின்மீது உட்காரக்கூடாது. விதவைப் பெண்களை உரலைப் குப்புறக் கவிழ்த்து அதில் உட்கார வைத்து நீராட்டித் தாலியைக் கழற்ற வேண்டும். (தொ.ப.,ப.அ.,ப.37 )

என்று கூறுவதிலிருந்து பெண்கள் உலக்கைமீதும் உரல்மீதும் கொண்டிருந்த நம்பிக்கைகள் வெளிப்படுகிறது.

## நோன்பு

மனித நாகரிகத்தில் உணவும் நீரும் முக்கிய இடம்பெறுகின்றன. தமிழர் பண்பாட்டில் நீர் தனித்த நம்பிக்கைக்குரிய களனாக அமைந்திருக்கிறது. இதன் அடிப்படையில் உணவு சார்ந்த நம்பிக்கைகள் பல வகைகளில் காணப்படுகின்றன. அமாவாசை, பௌர்ணமி நாள்களில் பொதுவாகப் பெண்கள் புலால் உணவு விலக்கும் வழக்கம் உடையவர்கள் இம்மரபுகளை அடியொற்றித் தமிழ் கிறிஸ்துவர்களும் 'லென்ட்' (lent) எனப்படும் நோன்புக் காலத்தில் புலால் உணவை அறவே விலக்குவது சில இடங்களில் வழக்கமாக உள்ளது. இந்த நோன்புக் காலம் என்பது இயேசுநாதர் சிறைப்பட்டது முதல் உயிர்த்தெழுந்தது வரையிலான 40 நாளாகும். கிறுத்துவ முதியவர் சிலர் இயேசுநாதர் சிலுவையில் மறித்தது ஒரு வெள்ளிக் கிழமை என்பதால் அந்தநாளில் புலால் விலக்கும் வழக்கம் உடையவர்களாக இருக்கின்றனர் என்று தொ.ப. எடுத்துரைக்கிறார். மேலும் மகப்பேறு தீட்டு கழிக்கும் நாளில் விளக்கு முன்னர் படைக்கப்படும் உணவினை ஆண்கள் பார்ப்பதும் உண்பதும் கூடாது என்ற நம்பிக்கை இருந்துவந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுகிறார். இதனை,

மகப்பேற்றுத் தீட்டுக் கழிக்கும் நாளில் விளக்கு முன்னர்ப் படைக்கப்படும் உணவினை ஆண்கள் பார்ப்பதும் உண்பதும் கூடாது. இது சடங்கு சார்ந்த உணவாகும். இதனைப்போலவே 'ஔவையார் நோன்பு'

*எனப் பெண்கள் மட்டும் கூடி நடத்தும் வழிபாட்டில் படைக்கும் அவித்த உணவு வகைகளும் ஆண்களின் பார்வையில் படக்கூடாது என்னும் நம்பிக்கை பெண்களிடம் ஆழமாக வேரூன்றியுள்ளது. (தொ.ப.,ப.அ.,ப.27 )*

என்று கூறுவதிலிருந்து பெண்கள் உணவின்மீது கொண்டுள்ள நம்பிக்கைகள் புலனாகிறது. திருமணமாகாத பெண்களும் திருமணம் முடிந்த பெண்களும் ஒன்றுசேர்ந்து மேற்கொள்ளும் நோன்பு ஔவையார் நோன்பு என்பர். இந்நோன்பானது குழந்தையில்லாத பெண்களுக்கு குழந்தை வேண்டியும் திருமணமாகாத பெண்களுக்கு நல்ல வரன் வேண்டியும் ஒரு வீட்டில் அனைத்துப் பெண்களும் ஒன்றுகூடி இரவு நேரத்தில் இந்நோன்பினை மேற்கொள்வார்கள். இதில் விதவிதமான உருவங்களை அரிசி மாவில் செய்து வழிபடுவார்கள் என முத்துசிதம்பரம் தம் நூல் ஒன்றில் கூறுவதை இங்கு உணர்ந்துகொள்ளலாம்.

## திருமணத்தில் பெண்கள்

பண்டையத் தமிழர்கள் தங்களுடைய வாழ்க்கையை ஒழுக்கங்களைக் களவு, கற்பு என மேற்கொண்டுள்ளனர். இல்லற வாழ்க்கைக்குச் சிறப்பாகக் கருதப்படுவது கற்பாகும். இதனை கற்பு எனப்படுவது கரணமொடு புணரல் என்பார் தொல்காப்பியர். திருமணம் செய்துகொள்ளாமல் இல்லறம் நடத்தக்கூடாது. அவ்வில்லறத்தை நடத்துவதற்கு அடிப்படையாய் இருப்பது திருமணம் ஆகும். சங்க இலக்கியங்களிலும் திருமணம் குறித்த சடங்குகளைக் காணமுடிகிறது. அவ்வகையில் தொ.பரமசிவன் திருமணத்தில் பெண்களுக்கான சடங்குகளை எடுத்துக் கூறுகிறார்.

தாலி கட்டுதல், திருப்பூட்டுதல் மாங்கல்யதாரணம் ஆகிய சொற்கள் திருமணத்தில் பெண்ணின் கழுத்தில் ஆண் தாலி அணிவிப்பதைக் குறிப்பதாகும் என்கிறார். மேலும் தாலிகட்டும் நிகழ்ச்சி நடக்கும்போது மணமக்களுக்குப் பின்னால் மணமகனின் சகோதரி அல்லது சகோதரிமுறை உள்ளவர்கள் கட்டாயம் நிற்க வேண்டும் என்ற செய்தியையும் தமிழ்நாட்டில் பெருவாரியாக இவ்வழக்கம் நிலவி வருகிறது எனவும் குறிப்பிடுகிறார்.

*மணவறை அல்லாமல் ஊர்மந்தை, இரண்டு வீடுகளுக்கு இடையில் உள்ள சந்து அல்லது முடக்குகள் போன்ற இடங்களில் தாலிக்கட்டும் வழக்கம் சில சாதியினரிடமும் இருந்துள்ளது. இவ்விடங்களில் கூட மணமகனின் சகோதரி தாலிகட்டத் துணை செய்கிறாள். இவ்வழக்கம் சில ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது. வன்முறையாகப் பெண்ணை வழிமறித்துத் தாலிக் கட்டியது வழக்கத்தின் எச்சப்பாடாகும். (தொ.ப.,ப.அ.,ப.59 )*

என்று தொ.ப கூறுவதிலிருந்து பெண்களின் நிலைப்பாடு வெளிப்படுவதை உணரலாம்.

மணமகன் இல்லாமலும் தாலிக்கட்டும் வழக்கம் சில மாவட்டங்களில் நடைபெற்றுள்ளது. அச்சமயத்திலும் மணமகனின் சகோதரி மணமகனுக்குப் பதிலாக அவனுடைய வளைதடியைக் (வளரி) கொண்டு போய் தாலிகட்டும் வழக்கம் இருந்துள்ளதையும் எடுத்துக் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

## தொழில் முறையில் பெண்கள்

பெண்கள் ஈடுபடும் தொழில்கள் சமூகத்தில் தாழ்ந்த மதிப்பு பெற்றவை களாகவும் ஒடுக்கப்பட்டவைகளாகவும் குறைந்த ஊதியம் அளிப்பவைகளாகவும் உள்ளன. தமிழகக் கிராமப்புறங்களில் நெல் குற்றுவது,கட்டிடத்திற்கு உபயோகப்படுத்தும் சுண்ணாம்புச் சாந்து அரைப்பது போன்ற பணிகளைப் பெண்களே மேற்கொள்கின்றனர். மேலும் பூப்பறிப்பது, பூக்களைத் தொடுப்பது மாலை கட்டுவது போன்ற தொழில்களில் பெண்களே ஈடுபடுகின்றனர் என்று முத்துசிதம்பரம் குறிப்பிடுகின்றார்.

இதன் அடிப்படையில் தமிழ் என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரையில் பருத்தி பெண்களும், பள்ளர் நெசவும் பாய் நெசவும் என்ற உட்தலைப்பில் பெண்களின் தொழில்சார்ந்த நிலையை எடுத்தியம்புகிறது. நூற்றல் தொழிலை கைம்பெண்கள் மேற்கொண்டுள்ளனர் என்பதை சங்க இலக்கிய குறிப்புகள் மூலம் எடுத்துரைக்கின்றார்.

மேலும் கோவை மாவட்டத்தில் கள ஆய்வில் கிடைத்த செய்தியையும் பதிவு செய்கிறார். இதனை,

*பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் கோவை மாவட்டத்தில் இருந்து கிடைத்த கள ஆய்வுச் செய்தி இதை உறுதிபடுத்துகிறது. ஒரு பெண் கைம்பெண் ஆனால் அவளுக்கு பிறந்த வீட்டில் இருந்து கோடிச்சேலை (சில சாதியார் இடத்து வெள்ளைச்சேலை) கொண்டு வந்து கொடுப்பது வழக்கம் கோவை மாவட்டத்தில் இந்தச் சடங்கு சிறிய வேறுபாட்டுடன் அமைகிறது. கைம்பெண் ஆனவளின் உடன்பிறந்தவன் அவள் கையில் நூல் நூற்கும் கதிர் (தக்ளி) ஒன்றையும் சிறிது பஞ்சையும் கொடுத்துவிட்டு, கொல்லன் கொடுத்த கதிர் இருக்கு. கொறநாட்டு பஞ்சு இருக்கு. நூறு வயசுக்கும் நூற்று பிழைச்சிக்க என்று சொல்ல வேண்டும். (தொ.ப.,ப.அ.,ப.49 )*

என்று குறிப்பிடுவதில் இருந்து அறிந்துகொள்ளலாம். மேலும் சங்க இலக்கியங்கள் இவ்வகையான கள ஆய்வுக்கு விரிந்த களமாகத் திகழ்கின்றன என்கிறார் தொ.ப.

### *மகப்பேறுகாலச் சடங்கு*

*மக்களிடையே ஒவ்வொரு சமூகத்தினரிடமும் சமயங்கள் சார்ந்த சடங்குகள் காணப்படுகின்றன. இவ்வகை சடங்குகள் மனிதனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு தொடர்புடையனவாகத் திகழ்கின்றன. பிறப்பு முதல் இறப்பு வரை சடங்குகள் ஒன்றொடு ஒன்றாக இணைந்துள்ளது. குறிப்பாகப் பெண்களுக்கான சடங்குகள் மிகுந்துள்ளதைக் காணலாம்.*

*பூப்படைதல், திருமணம், வளைகாப்பு போன்றவை இதற்கு உதாரணங்களாகும். மகப்பேறு காலத்தில் பெண்களுக்கானச் சடங்கில் துடுப்புக்குழி போடுதல் என்ற சடங்கு நடைபெறுவதைத் தொ.ப. குறிப்பிடுகிறார். இதனை,*

*குழந்தைப்பேற்றுத் தீட்டைக் கழிக்கும் நாளன்று (பெரும்பாலும் 10 அல்லது 16-ஆம் நாள்) துடுப்புக்குழி போடுதல் அல்லது தொடுப்புக் குழி போடுதல் என்னும் சடங்கு நடைபெறுகிறது. நஞ்சையும் கொடியையும் மந்திரப்பொருளாகக் கருதிப் பிறர் பார்வையில் படாதவாறு குழியிலிட்டு மூடிவிடுவது இன்றும் வழக்கமாக உள்ளது. (தொ.ப.,ப.அ.,ப.93 )*

*என்று குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். துடுப்புக்குழியில் போடப்படும் பொருள்களையும் தெய்வப் பொருளாகக் கருதுகின்றனர். நஞ்சும் கொடியும் தெய்வத்தின் பிரதிநிதியாகக் கருதப்பட்டு அவற்றை புதைத்த இடம் வழிபடும் இடமாகிறது என்று கூறுவதிலிருந்து பெண்களுக்குச் சமூகத்தில் உயர்ந்த இடத்தை அக்காலச் சூழலில் உருவாக்கியிருந்தனர் என்பதை உணர முடிகிறது.*

### *மஞ்சள், குங்குமம்*

*பெண்கள் பயன்படுத்தும் பொருட்களில் மஞ்சளும், குங்குமமும் மிகவும் இன்றியமையாதப் பொருளாகக் திகழ்கிறது. குறிப்பாக மஞ்சள் மருத்துவப் பொருளாகவும் தமிழ்ச்சமூகத்தினர் பயன்படுத்துகின்றனர். சமயச் சடங்குளிலும் இவ்வகைப் பொருள் முக்கிய இடம்பெறுகின்றன. சங்க இலக்கியத்திலும், பக்தி இலக்கியத்திலும் மஞ்சள் இடம்பெறுவதைத் தொ.ப. சுட்டிக்காட்டுகிறார்.பூசுமஞ்சளில், புகழ் பெற்றது விறலி மஞ்சள். 'விறலி' என்றால் முகபாவனை, விறலி என்றால் முகபாவங்கள் மாற்றி நடிக்கிற நடனமாடுகிற பெண்ணைக் குறிக்கும் சொல் எனக் கூறுகிறார். விறலியர் மட்டும் பூசிய மஞ்சளைக் காலப் போக்கில் குடும்பப் பெண்களும் பூசத் தொடங்கினர். விறலியரை மதியாத சமூகம் விறலி மஞ்சளை மட்டும் கொண்டாடத் துவங்கியது என்று தொ.ப. கூறுவது இங்கு நோக்கத்தக்கது.*

### *தெய்வ வழிபாட்டில் பெண்கள்*

*பண்பாட்டு கூறுகளில் முதன்மை தெய்வத்தை வழிபடுவதாகும். தொன்றுதொட்டு தெய்வம் குறித்த நம்பிக்கைகள் பேசப்பட்டு வருகின்றன. நாட்டுப்புறத் தெய்வங்களில் பெருந்தெய்வங்கள், சிறு தெய்வங்கள் எனக் காணப்படுகின்றன. சிறு தெய்வக் கோயில்கள் கிராமங்கள் தோறும் இருக்கின்றன. பல்வேறு கிராமங்களில் பல சாதிப் பிரிவினையுடைய மக்களிடையே பொதுவான தெய்வங்கள் காணப்படுகின்றன. இவற்றில் பெண் தெய்வ வழிபாடு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களை ஆராய்வதே பண்பாட்டின் அடையாளம் என்று சு.சக்திவேல் குறிப்பிடுவது இங்கு பொருத்தமாகும். இதன் அடிப்படையில் தொ.ப. பெண் தெய்வ வழிபாட்டினை எடுத்துக் கூறுகிறார். அதிக அளவில் பெண் தெய்வ வழிபாடு காணப்படுகிறது என்கிறார். மேலும் பெண் தெய்வங்களைத் தாய் தெய்வங்கள் என்று குறிப்பிடுகின்றார். மேலும் அம்மன் கோயில்கள் பெரும்பாலும் வடக்கு நோக்கி அமைந்திருக்கின்றன எனவும் 'சூலாடு குத்துதல்' பற்றி,*

*தென் மாவட்டங்களில் உக்கிரம் மிகுந்த பெண் தெய்வங்களுக்கு இரத்தப் பலியிடும் முறை சற்று அச்சம் தருவதாக அமைகின்றது. நிறைசினையாக உள்ள ஒரு ஆட்டைக் கொண்டு வந்து பெண் தெய்வத்தின் முன் நிறுத்துவர். வேல் போன்ற ஒரு கருவியினால் ஆட்டின் வயிற்றைக் குத்திக் கிழித்து அதன் உள்ளே இருக்கும் குட்டியை எடுத்துப் பலி பீடத்தின்மீது வைக்கின்றனர். குத்திக் கிழிப்பதனால் பெண்ணாடும் இறந்துவிடும், குட்டியும் இறந்துவிடும். இவ்வாறு பலியிடுவதைச் சூலாடு குத்துதல் என்பர். (தொ.ப.,ப.அ.,ப.39 )*

*என்று கூறுகிறார். இது தென் மாவட்டங்களில் பெண் தெய்வங்கள் அமைந்துள்ள பாங்கினையும் வழிபாட்டு முறையையும் வெளிப்படுத்துகிறது. பண்டைய தமிழர்கள் நம்பிக்கையுடன் பெண் தெய்வங்களை வழிப்பட்டனர் என்பதையும் அறிய முடிகிறது.*

### *முடிவுரை*

*கட்டுரைகளைத்; திறனாய்வின் அடிப்படையிலும் கள ஆய்வின் அடிப்படையிலும் எழுதியுள்ளார். பண்டைய தமிழர்களின் சமயம், சடங்கு, புழங்குபொருட்கள் என அனைத்தையும் நுணுகி ஆராய்ந்து சங்க இலக்கியங்கள், கல்வெட்டுகள் என ஆதாரங்களோடு எடுத்துக்கூறி விளக்கமுடன் விவரித்துள்ளார். பண்பாட்டு அசைவுகள்*

*என்னும் இந்நூலில் நிரம்ப செய்திகள் காணக்கிடைக்கின்றன. இதில் பெண்கள் குறித்த தகவல்களும் அவர்களுடைய சடங்கு முறைகளும் தெரிந்துகொள்ள முடிகிறது. பண்பாட்டோடு கூடிய பெண்ணியச் சடங்குகளாக இதில் காணப்படுகின்றன. பெண்களுக்கான நிலையையும், அவர்களின் இல்லறப் பொருண்மையையும் அறிந்துகொள்ளலாம்.*

## *REFERENCES*

Agamudai Nambi, K.C. (2004) Thirukkural (with English Verses), Vanji Malar, Madurai, India

Paramasivan, T. (2001) Panpaattu Asaivukal, Kalasuvadu Publications Pvt. Ltd., Nagercoil, India

Raja, K. (2013) Tolkappiyam Porul - (Vol.I), Tiruchirapalli, India

Sakthivel, S. (2022) Nattupuraviyal Aaivu, Manivasagar Patippagam, Chennai, India

Sanmugasidhamparam, S. (199) Tamilaga Nattupuraviyalil Pengal, Nagarkovil, India

Shanmugasundaram, S. (2011) Nellai Naattupurath Theivangal Vazhipaadum Panpaadum, Kaviya patippagam, Chennai, India

Subramaniyan, P. (2009) Tamil Nattupura Iyal Aaivugal, Kaviya Patippagam, Chennai, India

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2023. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License

வாகை பதிப்பகம்